<u>வாக்குமூலம்</u>
<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>
<u>வழக்கு எண் : SC.No. 316/2022</u>
<u>வழக்கு சாட்சி PW–9</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மீனாட்சி நாதன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | நாகலிங்கம்பிள்ளை | தொழில் | : | காவல் துணை கண்காணிப்பாளர் |
| கிராமம் | : | திருவண்ணாமலை | வயது | : | 57 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Wednesday of 27.04.2026.

**(1ம் எதிரி 2ம் எதிரி, 4ம் எதிரி, 5ம் எதிரி ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. இதர எதிரிள் ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

<u>முதல் விசாரணை :</u>

நான் தற்போது திருவண்ணாமலை மாவட்டத்தில் செய்யாறு காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 25.09.2016ம் தேதி அச்சன்புதூர்வட்ட காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது அச்சன்புதூர் காவல் நிலைய குற்ற எண்.209/2015 வழக்கை என்னுடைய மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சென்னை வட்டார தடய அறிவயல் ஆய்வகத்திலிருந்து இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் ஆய்வறிக்கை பெற்றேன். அந்த ஆய்வறிக்கை அசாஆ.18 ஆகும். தடய அறிவியல் அலுவலர் ரமேஷ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் வழக்கு கோப்பினை சட்டக்கருத்துரு பெற குற்ற வழக்கு தொடர்பு துறை இயக்குநருக்கு அனுப்பினேன். பின்னர் சட்டக்கருத்துரு பெற்று குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்ய முன் அனுமதி பெற திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு மாவட்ட கண்காணிப்பாளர் மூலம் அனுப்பி

வைத்தேன். பின்னர் பணிமாறுதலில் சென்றதனால் வழக்கு கோப்பினை காவல் நிலையம் ஒப்படைத்தேன்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

தடய அறிவியல் ஆய்வகத்திற்கு குற்றவியல் நீதிமன்றம் மூலம் யார் ஒப்படைத்தார்கள் என்றால் நான் அனுப்பவில்லை. இந்த வழக்கில் கைப்பற்றப்பட்ட துப்பாக்கியை நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். தடய அறிவியல் அலுவலர் என்னுடைய விசாரணையில் அறிவியல் அறிக்கையின் விவரங்களை சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து இந்த வழக்கை புனைவதற்காக தயாரித்துக்கொண்டேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை.

சாட்சி திருவண்ணாமலை முதன்மை மாவட்டம் ஒருங்கிணைந்த நீதிமன்ற காணொளி அறையில் இருந்து காணொளி மூலம் ஆஜரானார். அவரது வாக்குமூலம் Thiru. Renukrishnan, Computer Operator, முதன்மை மாவட்ட நீதிமன்றம், திருவண்ணாமலை என்பவர் முன்னிலையில் ஒருங்கிணைக்கப்பட்டு, இந்த திறந்த நீதிமன்றத்தில் எதிரிகள் முன்னிலையில் பெஞ்ச் கிளார்க் அவர்களால் பிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.04.28 11:13:39 +0530